## 11.1 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள நியமனக் குழுக்கள் (Appointment Committe) பணியிடங்களுக்கு நேரிடை நியமன முறையில் நபர்களை தேர்ந்தெடுக்க வழிமுறைகள் (Guidelines) வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை

அரசாணை (நிலை) எண்.129 நாள் : 20.7.1998

**ஆணை :–**

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நியமனக் குழுக்கள் (Appointment Committe) நேரிடைய நியமன முறையில் தற்போது நபர்களை பணி விதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறது. நியமனக் குழுக்கள் செய்யும் தேர்வுகளை ஒளிவு மறைவு இல்லாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தில் அரசு கீழ்கண்ட விதிமுறைகள் (Guidelines) வெளியிட்டு ஆணையிடுகிறது.

1) நியமனக் குழு தேர்ந்தெடுக்கும் அனைத்து பணியிடங்களுக்கும் இட ஒதுக்கீடு அடிப்படையில் சுழற்ச்சி முறையை (Communal Rotation) கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

2) வேலை வாய்ப்பகத்திலிருந்து கல்வி மற்றும் வயது தகுதியுள்ளவர்கள் பெயர்கள் அடங்கிய பட்டியல்கள் பெற்று அதில் கண்டுள்ளவர்களின் பெயர்களில் இருந்துதான் பெயர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

3) வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்படும் பட்டியலில் கண்டுள்ள பெயர்களில் மேலே (1)ல் உள்ள விதிமுறைப்படி பதிவு மூப்பு அடிப்படையில் தான் நியமனங்கள் தகுதியுள்ளவர்களாக இருந்து நியமனக்குழு கூடும் நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நியமனம் செய்வதற்கான அதிகபட்ச வயதை அடைவதாக இருந்தால் அவர்களின் பெயர்களுக்கு முன்னுரிமை அளித்து தேர்ந்தெடுக்கலாம்.

4) நியமனக் குழுக்களின் கூட்டத்தை எப்பொழுதெல்லாம் தேவையோ அப்பொழுதெல்லாம் குழுத் தலைவர் கூட்டலாம் அவ்வாறு நடைபெறும் கூட்டத்தில் பத்தி 1ல் பட்டியலை மூன்று நாட்களுக்குள் அறுதியிட்டு சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரியால் வெளியிடப்படவேண்டும்.

5) அரசு அவ்வப்போது வெளியிடும் ஆணைகள் மற்றும் வழிமுறைகளையும் நியமனக் குழுக்கள் கடைபிடிக்க வேண்டும்.

2. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆணையர்களுக்கும் செயல் அலுவலர்களும் அரசு ஆணையில் உள்ள விதிமுறைகளை நியமன குழு உறுப்பினர்களுக்கு உடனடியாக தெரிவித்து கடைபிடிக்கச் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி )

**எஸ். மாலதி**

அரசுச் செயலாளர்